**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண். 146/2021**

**26.06.2024**

**வா.சா. 1 அன்பு**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை -**

நான் பனிரெண்டாம் வகுப்பு படித்துள்ளேன். வாதி பெருமாள் என் அப்பா வழி தாத்தா, அம்மாவின் வழியில் பெரியப்பா முறையாகும். வாதி பெருமாளுக்கு வாரிசு இல்லை. வாதி நிலம் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் ஆக்கிரமித்துள்ள எங்கள் நிலத்தை சுவாதீனம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தாவா ஏ செட்யுல் சொத்து விவரம் தெரியும். அதற்கு ஜக்பந்தி தெற்கே ஏரிக்கால்வாய், வடக்கே கிணறும், பிரதிவாதிகள் நிலமும், மேற்கே பிரதிவாதிகள் நிலமும், கிழக்கே சுப்பிரமணியின் நிலமும் ஆகும். ஏ செட்யுல் சொத்து விஸ்தீரணம் 0.45 ஏர்ஸ், 1.20 ஏக்கர்ஸ். மேற்படி விஸ்தீரணம் மேற்படி கிணற்றை உள்ளடக்கியது அல்ல, கிணறு தனிபாகம். 2018ல் அளவையர் மூலம் அளந்தோம். அவ்வாறு அளந்தபோது பிரதிவாதியின் நிலத்தை அளந்தோமா என்றால் அளக்கப்பட்டது. பிரதிவாதிகள் தங்களுடைய சி செட்யுல் சொத்தை சரியான அளவில் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், நான்கு புறமும் ஜக்பந்தி இல்லாத ஏ செட்யுல் சொத்து நான் சொல்வது போல் அளக்கப்படவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் ஏ செட்யுல் சொத்தை அளந்தபோது வடக்கு பக்கம் காணிக்கல் இல்லாததால் எல்லையை நிர்ணயிக்கமுடியவில்லை என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் மேற்குப்பக்கம்தான் ஆக்கிரமித்துள்ளார்கள் என்பதால் அதற்கு சம்மந்தம் எதுவும் இல்லை. ஏ செட்யுலின் 4 பக்கங்களிலும் காணிக்கல் உள்ளதா என்றால் தெற்கே 1 காணிக்கல் உள்ளது, கிழக்கேயும், வடக்கேயும் உள்ள காணிக்கல் மேடு போட்டு மறைக்கப்பட்டுள்ளது, மேற்கே காணிக்கல் இல்லை. சொத்து விவரப்படி ஏ செட்யுல் சொத்தின் வடக்கேயும், மேற்கேயும் பிரதிவாதிகள் சொத்துதான் உள்ளன என்றால் சரிதான், வடக்கே என் பாகம் உள்ள கிணறும் உள்ளது. ஏ செட்யுல் சொத்தை அளப்பதற்கு பிரதிவாதிகளிடமும், சுப்பிரமணியிடமும் தகவல் சொல்லவேண்டும் என்றால் சரிதான், சொல்லிவிட்டுதான் அளந்தோம். தாவா ஏ செட்யுல் சொத்தை தனியாக அளக்க முடியாது என்றாலும் பிரதிவாதிகளுடைய சொத்து மற்றும் சுப்பிரமணியத்தின் சொத்தை அளந்தால்தான் அளக்கமுடியும் என்றாலும் அவர்களுடைய சொத்தையும் அளந்தோம். நீதிமன்ற ஆணையர் அளந்தபோதும் பிரதிவாதிகள் மற்றும் சுப்பிரமணியத்தின் சொத்துக்கள் அளக்கப்பட்டனவா என்றால் அளக்கப்பட்டன. நீதிமன்ற ஆணையர் அளந்தபோது சுப்பிரமணியத்தின் நிலம் அளக்கப்படவில்லை என்றாலும் பிரதிவாதிகளின் நிலம் மட்டும்தான் அளக்கப்பட்டது என்றாலும் அதிலிருந்த காணிக்கல்லை வைத்து பிரதிவாதிகளின் நிலம் நிர்ணயம் செய்யப்பட்டாலும் மேற்கொண்டு மற்ற நிலங்களை அளக்கமுடியவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து எவ்வாறு வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால' கரியன் தன் மருமகன் வாதிக்கு எழுதி வைத்த உயில் மூலம் பாத்தியப்பட்டது. இந்த விவரம் நேரடியாக தெரியுமா என்றால் நான் பிறக்காததால் தெரியாது. கரியனுக்கு பில்லாந்தி கிராமம்தான் பூர்வீகம். கரியனுக்கு 1 ஆண் குழந்தை பிறந்து இறந்துவிட்டது, அது தவிர 2 மகள்கள். தாவா சொத்தின் சர்வே எண், ஜக்பந்தி எனக்கு தெரியும். நீதிமன்ற ஆணையர் அளந்தபோது ஏ மற்றும் சி செட்யுல் சொத்துக்களில் என்ன பயிர் வைக்கப்பட்டு இருந்தது என்றால் பி செட்யுல் அடங்கிய ஏ

செட்யுல் சொத்து கரம்பாகவும், சி செட்யுல் சொத்தில் நெற்பயிரும் இருந்தது. அப்போது சுப்பிரமணியின் நிலத்தில் என்ன பயிர் இருந்தது என்றால் நெற்பயிர் இருந்தது. சுப்பிரமணியின் நிலம் கரம்பாகத்தான் இருந்தது என்றாலும் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பயிர் வைக்கப்பட்டு இருந்தால் நிலம் அளக்கப்படமுடியுமா என்றால் அளக்க முடியும். சி செட்யுல் சொத்தின் இருபுறமும் பிரதிவாதிகள் நிலமே பயிராகி இருந்ததால் நிலத்தில் புதைந்திருந்த காணிக்கல்லை வைத்து நான் சொல்வது போல் அளந்திருக்கமுடியாது என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படம் தாவா சி செட்யுல் சொத்துதான். அதில் காணிக்கல் பயிரிடையே புதைந்துள்ளது என்றால் சரியல்ல. கரம்பாக இருந்தால்தான் ஒரு காணிக்கல்லின் அடிப்படையில் அளந்து மற்றொரு காணிக்கல்லை நிர்ணயம் செய்யமுடியும் என்றால் சரியல்ல, காணிக்கல் வயலின் நடுவே இருக்காது, வரப்பை ஒட்டி ஒரு மூலையிலேயே இருக்கும், அதனால் வரப்பின் அடிப்படையில் அளக்க முடியும். பிரதிவாதிகள் தாவா சி செட்யுல் சொத்தை ஒட்டியுள்ள தங்கள் பிற உட்பிரிவு செய்யப்பட்ட நிலங்கள் அனைத்தையும் சேர்த்து ஒன்றாக நிரவி உள்ளதால் வரப்புகள் இல்லை என்றாலும் அதன் காரணமாக வரப்பு ஓரமாக காணிக்கல் இருக்கமுடியாது என்றாலும் சரியல்ல. தாவா ஏ செட்யுல் சொத்தை காணிக்கல் வைத்துதான் அளக்கமுடியும் என்றால் சரிதான், அப்படித்தான் அளந்தார்கள். கிழக்கே உள்ள சுப்பிரமணியத்தின் நிலத்திலிருந்து ஏ செட்யுல் சொத்தை மேற்கு திசையில் அளந்தார்களா அல்லது வடக்கு நோக்கி Z முறையில் அளந்தார்களா என்றால் சுப்பிரமணியன் நிலத்திலிருந்து என் காணிக்கல்லை நிர்ணயித்து அதிலிருந்து மேற்காக பிரதிவாதிகள் நிலம் வரை அளந்தார்கள். சுப்பிரமணியன் நிலத்திற்கும் தாவா சி செட்யுல் நிலத்திற்கும் நடுவே கிணறு உள்ளது என்றாலும் அதனால் நான் மேலே சொல்லியவாறு அளந்திருக்கமுடியாது என்றாலும் கிணற்றை சுற்றிதான் அளந்திருக்கமுடியும் என்றாலும் சரியல்ல. தாவா சி செட்யுல் சொத்திற்கு மேற்கே உள்ள நிலங்களை தாண்டி அங்காளஅம்மன் கோயில் அருகே உள்ள கல்லை வைத்துதான் பிரதிவாதிகள் நிலத்தை அளக்க முடியும் என்றால்சரிதான், அப்படித்தான் அளந்தார்கள். அவ்வாறு அளந்தபோது தாவா ஏ செட்யுல் சுவர் வரை பிரதிவாதிகளின் நிலம் வந்தது என்றால் சரியல்ல, சுவற்றிற்கு 6 அடிக்கு முன்பே பிரதிவாதிகளின் நிலம் முடிந்துவிட்டது. மேற்கிலிருந்து கிழக்காக அளந்தபோது தாவா ஏ செட்யுல் சொத்தில் உள்ள காணிக்கல் 3 மீட்டர் கிழக்கே தள்ளி உள்ளது என்றால் சரியல்ல. வாதசாஆ.5 விவரம் தெரியும். போலிசில் கொடுத்த புகார் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் சொல்வது பொய் என்றாலும் நான் புகார் கொடுத்திருந்தால் அதன் மீது போலிசார் நடவடிக்கை எடுத்திருப்பார் என்றாலும் நானும் அதை வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை அளக்க படி கட்டியும் நான்தான் அளக்க ஒத்துழைக்கவில்லை என்றாலும் ஆக்கிரமிப்பு இருந்திருந்தால் 1ம் பிரதிவாதி அளப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கமாட்டார் என்றாலும் சரியல்ல, 1ம் பிரதிவாதி படி கட்டினாலும் மேற்கொண்டு அவர்தான் நடவடிக்கை எடுக்கவில்லை, நாங்கள் ஒத்துழைக்க தயாராக உள்ளோம். நான் ஆக்கிரமிப்பு என கூறும் பகுதியில் பிரதிவாதி சிமெண்ட் பைப் வைத்துள்ளார் என்றால் சரிதான், நிலத்திற்கு அடியில் புதைத்து வைத்துள்ளார், அவ்வாறு மற்றவர் நிலத்தில் தண்ணீர் பைப் புதைத்து எடுத்துச் செல்வது வழக்கம்தான். மேற்படி பைப் பிரதிவாதிகளால் எப்போது ,புதைக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் என் தாத்தா கரியன் உயிரோடு இருந்தபோது புதைத்துள்ளார்கள். ஆக்கிரமிப்பு என்று நான் கூறும் பகுதியில் 1974லேயே பிரதிவாதிகள் பைப் புதைத்துவிட்டார்கள் என்றாலும் நான் சொல்வது

போல் தாவா ஏ செட்யுல் சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றாலும் தாவா பி செட்யுல் சொத்து பிரதிவாதிகளுடைய சி செட்யுல் சொத்தில் அடங்கியது என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் ஏ செட்யுலில் பிரதிவாதிகள் பி செட்யுல் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் கரியனே அதை ஆட்சேபித்திருப்பார் என்றாலும் தற்போது பல வருடங்கள் கழித்து நாங்கள் வழக்கு தாக்கல் செய்திருப்பது தவறு என்றாலும் சரியல்ல, வயலை ஒட்டியுள்ள நீர்க்கால்வாயை ஆக்கிரமித்து பைப் அமைத்து மேலே பிரதிவாதிகள் மூடிவிட்டார்கள். தாவா ஏ செட்யுல் சொத்தும், சி செட்யுல் சொத்தும் சம தளத்தில் இல்லை என்றால் சரிதான், என்னுடைய சொத்து மேடாகவும், பிரதிவாதிகள் சொத்து பள்ளத்திலும் உள்ளது. தாவா ஏ செட்யுல் சொத்தின் வடக்கே உள்ள கிணற்றிற்கு கூட்டு பட்டா என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் தற்போது நானும் பிரதிவாதிகளும் சுவர் கட்டி பாகம் பிரித்துவிட்டோம் என்றால் சரிதான். மேற்படி கிணற்றில் என் பாகம் வரை சேர்ந்ததுதான் தாவா ஏ செட்யுல் சொத்து என்றால் சரியல்ல, கிணறு தனி பாகம். கிணறு மேடு விஸ்தீரணம் 11 சென்ட். கிணறு மட்டும் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் அளந்தால்தான் தெரியும். என்னுடைய பாக கிணறு மேடு எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால் சர்வே எண் 20/12பில். கிணற்றின் தெற்கு பக்கம் கிணற்று மேடு அமைந்துள்ளது. அவ்வாறு நான் சொல்வது தவறு என்றாலும் கிணற்றிற்கு கிழக்கு பக்கம் சுப்பிரமணியத்தின் நிலத்தை ஒட்டி மேடு கொட்டியுள்ளேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி மேற்படி கிணற்றில் மேற்கு பக்கம் மேடு கொட்டியுள்ளார். தாவா ஏ செட்யுல் சொத்து வடக்கு பக்கம் முடியும் இடத்தில் ஒட்டியே கிணறு உள்ளது என்றால் சரிதான்.

(கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)